(முற்பகல் 9-30)

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, மத்திய அரசு அனுமதி அளிக்காத காரணத்தால் மிகப்பெரிய ஊராட்சி ஒன்றியங்களையும் பிரிக்க முடியவில்லை. ஆகவே, அதிக அளவில் ஊராட்சிகள் சேர்ந்திருக்கின்ற பெரிய ஒன்றியங்களுக்கு மட்டுமாவது, சாலைக்கான சிறப்பு மானியங்கள் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அதனுல்தான் ஜனத்தொகையின் அடிப்படையில் அல்லாமல் நீளத்தின் அடிப்படையில், தேவையின் அடிப்படையில் எடுத்துக் கொள்வது என்று மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினக்கள் 768, 769, 770 மூன்றும் சேர்த்து எடுத்துக்கொள்ளப்படும்.

New roads in Gummudipoondi

*768 Q.—THIRU K. VEZHAVENDAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state the names of link roads which have now been formed in Gummudipoondi sub-taluk and Ellapuram Panchayat Union under the scheme of formation of link-roads to villages having a population above 1,500?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஒரு விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

*769 Q.—THIRU K. VEZHAVENDAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state the reasons for the delay in implementing the scheme of black-topping the roads in Mukkarambakkam village in Gummudipoondi sub-taluk under Rural Roads Scheme, eventhough the population of that village is 1,500?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: கிராமச் சாலைத் திட்டத்தின்கீழான வேலைகள் ஒவ்வொரு கட்டமாக செயல்படுத்தப் படுகிறது. நிதி ஒதுக்கீட்டை கருத்தில் கொண்டு இத்திட்டத்தின் கீழ் செயலாக்க வேண்டிய வேலைகள் அனைத்தும் படிப்படியாகத் தான் எடுத்துச் செயலாக்க இயலும்.

@ 603–606-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.